உடைந்த உள்ளங்களுக்கு

# இயேசுவின் சமாதானம்

வருடம் 13 மாதம் 1



# இயேசு உங்கள் ஆறுதல்

ஜூலை 2014

Rajlynt Robin

# இயேசுவின் சமாதானம் ஊழியத்தில் ராஜ்லின்ட் ராபின்













கர்த்தர் இயேசுவின் பெரிதான கிருபையினாலும், உங்கள் ஜெபத்தினாலும் இயேசுவின் சமாதானம் ஊழியம் மூலம் உலகமுழுவதும் பல லட்சம் மக்களை தேவன் இயேசு ஆசீர்வதித்து வருகிறார்.

1992-ல் மனைவி ஊழியத்தை ஆரம்பித்தாள். மகன் ராஜ்லின்ட் ராபின் 1998-ல் அவனுடைய 7வது வயதில் ஊழியத்தில் அம்மாவோடு இணைந்து பணியாற்றினான். இருவரும் ஏழைகள் மத்தியில் சென்று உணவு, உடை, பொருள் கொடுத்து ஜெபிக்க ஆரம்பித்தார்கள். 1999-ல் நான் இவர்களோடு இணைந்து, ஊழியம் செய்ய ஆரம்பித்தேன்.

2001-மே 21-ம் தேதி தேவன் என்னோடு பேசி, இந்த ஊழியத்திற்கு இயேசுவின் சமாதானம் என்ற பெயரைக் கொடுத்தார்.

2002 ஜுலை மாதம் இயேசுவின் சமாதானம் பத்திரிக்கை முதல் இதழ் வெளிவந்தது. இதுவரை கர்த்தர் இயேசுவின் கிருபையினால், பல லட்சம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டு, உலகமெங்குமுள்ள பல லட்ச மக்களுக்கு இயேசுவின் சமாதானத்தை தேவன் இயேசு கொடுத்து வருகிறார். கடந்த 1½ வருடங்களாக இயேசுவின் கிருபையினால், அனைத்து பக்கங்களும் பலவண்ணங்களில் வெளி வருகிறது.

இதற்கு இயேசுவின் கிருபையினால், அன்பு மகன் ராஜ்லின்ட் ராபின் மிகுந்த உதவியாய் இருக்கிறான். ராஜ்லின்ட் ராபின் சிறு கூட்டங்களில் பேசினாலும், 2009-ம் ஆண்டு இயேசுவின் சமாதானம் & இயேசு விடுவிக்கிறார் இணைந்து நடத்திய பெண்கள் புதுவாழ்வு முகாமில் 1000 பேருக்கு மத்தியில் பாடல் பாடி தேவனை மகிமைப்படுத்தினான். 2010-ல் சிங்கப்பூர், மலேசியா தேசங்களில் வாலிபர் கூட்டங்களில் பேச இயேசு கிருபை செய்தார்.

தேவனுடைய கிருபையினால் 2014-ம் ஆண்டு, கோவை, வ.உ.சி மைதானத்தில் நடைபெற்ற இயேசுவின் சமாதானம் பரவசப்பெருவிழாவில் ராஜ்லின்ட் ராபின் பல ஆயிக்கணக்கான மக்கள் மத்தியில் பேசி, என் இயேசு (சி.டி) பாடல்களைப் பாடி கர்த்தர் இயேசுவை மகிமைப்படுத்தினான். பின் வரும் நாட்களில் எங்களைவிட ஆண்டவர் இயேசு மகன் ராஜ்லின்ட் ராபினை அதிக வல்லமையாய் பயன்படுத்த உங்கள் ஜெபத்தை மிகவும் அதிகமாய் எதிர்பார்க்கிறேன்.

இயேசுவின் சமாதானம் நம்மோடு இருப்பதாக.

**- ஏ.எஸ்.வி. ராபின்.**

# அன்புக் கடிதம்



## இயேசு உங்களை மறப்பதில்லை

(ஏசா 49:15).

**என் அன்பு அண்ணன், தம்பி, அக்கா, தங்கைகளே!**

**மகிமையின் ராஜா இயேசு கிறிஸ்துவின் இனிய பெயரால் உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன்.**

இந்நாள் வரை கண்மணி போல் நம்மை காத்து வரும் நம் தேவாதி தேவன் இயேசுவின் அன்பையும், இரக்கத்தையும், நினைத்துப் பார்ப்போம். நன்றியுள்ள இதயத்தோடு நாம் இணைந்து, அவரை துதித்து மகிமைப்படுத்துவோம்.

கர்த்தர் இயேசுவின் பெரிதான கிருபையினாலும், உங்கள் ஜெபத்தினாலும் இயேசுவின் சமாதானம் பத்திரிக்கை 13வது வருடத்திற்குள் பிரவேசிக்கிறது. இதற்காக முதலாவது தேவன் இயேசுவை நன்றியோடு துதித்து, இரண்டாவது என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து உங்கள் யாவருக்கும் நன்றி செலுத்துகிறேன்.

உங்களுக்காக, உலக மக்களின் நல்வாழ்வுக்காக நாங்களும், இயேசுவின் சமாதானம் ஜெபக் குழுவினரும் அனுதினமும் மிகுந்த மனபாரத்தோடு ஜெபித்து வருகிறோம். எங்கள் ஜெபக் குழுவினருக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். தேவன் இயேசு நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

தினமும் **1 நிமிடமாவது** எங்களுக்காக, இயேசுவின் சமாதானம் ஊழியங்களுக்காக
ஜெபிக்க அன்பாய் கேட்டுக்கொள்கிறேன்.
தேவன் இயேசு நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

**With Deep Love & Affection With Prayers**

உங்கள் அன்புத் தம்பி / அண்ணன்

**- ஏ.எஸ்.வி. ராபின்.**



இயேசுவின் சமாதானம்
உடைந்த உள்ளங்களுக்கு
மாத இதழ்

**Final Designing & Editing**

RAJLYNT ROBIN B.Sc.,Vis.com., (M.B.A.)
Managing Partner, Rajlynt Exports & Imports




– ஏ.எஸ்.வி. ராபின்

**துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் ஆறுதல் அடைவார்கள்** (மத்தேயு 5:4).

இவ்வுலகில் பாடுகளினால் துயரப்படும் மக்கள் ஏராளம், ஏராளம். நாம் அவர்களை பார்க்கும் போது அவர்கள் சிரித்த முகத்தோடு இருப்பார்கள். அவர்கள் சந்தோஷமாக வாழ்வது போல நமக்கு தோன்றும். ஆனால் அவர்களுடைய உள்ளம் துக்கத்தோடு காணப்படும். அவர்களுடைய வாழ்வில் ஏராளமான வேதனை நிறைந்த சம்பவங்கள் நிகழ்ந்திருக்கும். இப்படிப்பட்ட மக்கள் இவ்வுலகில் கோடிக்கணக்கானோர்.

இயேசு கிறிஸ்து இந்த பூமியில் மனிதராய் வாழ்ந்த போது, அவரைத்தேடி திரளான மக்கள் விடுதலை பெறும்படியாக வந்தார்கள். அவர்கள் பலவகையான பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டதினால் அவரிடம் வந்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு இயேசு சொன்ன ஆறுதலான வார்த்தைகளில் ஒன்று இது. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள்ஆறுதல் அடைவார்கள். (மத்தேயு 5:4).

## நீங்கள் பாக்கியவான்கள்

இதை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்களும் பல பிரச்சனைகளால் துயரப்பட்டு கலங்கிக் கொண்டிருக்கலாம். இயேசு சொல்கிறார். நீங்கள் பாக்கியவான்கள், பாக்கியவதிகள். நாம் இயேசுவை உண்மையாய் தேடி அவருக்கு பிரியமாய் வாழ்ந்து பாடுபட்டுக் கொண்டிருக்கலாம். மற்றவர்கள் உங்களை பாவி என்றும், பாக்கியம் இல்லாதவன், பாக்கியம் இல்லாதவள் என்றும் சொல்லலாம். நீங்கள் கலங்காதிருங்கள். இயேசு உங்களை ஒருபோதும் மறப்பவர் அல்ல. (ஏசா 49:15). அவர் உங்களை நினைத்து கொண்டே தான் இருக்கிறார். உங்கள் பிரச்சனைகளை, உங்கள் துயரத்தை போக்கி உங்கள் கண்ணீரை நிச்சயமாய் துடைப்பார். மட்டுமல்ல உங்களை உயர்வாய் வாழ வைப்பார்.

## இயேசு உங்களை சந்தோஷப்படுத்துவார்.

பைபிளில் யோவான் 11ஆம் அதிகாரத்தில் பார்க்கிறோம், லாசரு என்பவர் இறந்து 4 நாட்களாகி விட்டன. அவருடைய சகோதரிகள் அவருடைய இழப்பை தாங்க முடியாமல் மிகுந்த துயரத்தோடு காணப்பட்டார்கள். மரியாள் என்ற சகோதரி இயேசுவிடம், நீர் இங்கே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டான் (யோவான் 11:32) என்றாள். அவள் அழுகிறதையும், அவளோடு கூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்ட போது, ஆவியிலே கலங்கி துயரமடைந்து... கண்ணீர்



விட்டார். (யோவான் 11 : 33. 35). உடனே இயேசு லாசருவின் கல்லறைக்கு சென்று லாசருவை உயிரோடு எழுப்பி, தம்முடைய வல்லமையை விளங்கச் செய்தார். இந்த உலக வாழ்வில் நாம் துயரப்படும்போது, எப்பொழுதும் நம்மோடு சேர்ந்து துயரப்படுகிற ஒருவர் உண்டு என்றால் அவர் தோவாதி தேவன் இயேசு ஒருவரே. அன்றைக்கு அற்புதம் செய்த கர்த்தர் இயேசு இன்றும் உயிரோடு இருக்கிறார். உங்கள் வாழ்விலும், எல்லாம் முடிந்துவிட்டது, வாழ வழியே இல்லை என்று நீங்கள் கலங்கிக் கொண்டிருக்கலாம். உங்கள் அருமையானவர்களை இழந்திருக்கலாம், உங்கள் நோய்கள், பணப்பிரச்சனைகள், பிள்ளைகளின் திருமணத் தடைகள், ஊழியம், வேலை, வியாபாரத்தில் உள்ள பிரச்சனைகள், நஷ்டங்கள், பிசாசினால் ஏற்பட்ட போராட்டங்கள், பில்லி சூன்ய, செய்வினைக் கட்டுகள், கோர்ட்டு கேஸ்கள், கடன் பிரச்சனைகள், உள்ளத்தை இருள் கவ்விப் பிடிக்கும் நிலைமை, மனிதர்களால் கைவிடப்பட்ட நிலைமை, நம்பிக்கை துரோகம், வேலை இல்லாத நிலை, பிள்ளை இல்லாத நிலை எல்லாவற்றையும் சர்வ வல்லமையுள்ள தேவன் இயேசு மாற்றி உங்களை விடுவிப்பார். மனிதர்கள் உங்கள் பிரச்சனைகளிலிருந்து உங்களுக்கு விடுதலை தர முடியாது. ஆகவே தேவன் இயேசுவிடம் உங்கள் பிரச்சனைகளை, கண்ணீரோடு ஜெபித்து அவருக்கு தெரியப்படுத்துங்கள்.

உங்கள் துயரங்களை இயேசு சந்தோஷமாய் மாற்றுவார். உங்களுக்கு சமாதானம் தந்து ஆசீர்வதிப்பார். உங்களை பாக்கியவானாக, பாக்கியவதியாக மாற்றுவார்.

## இயேசு என் ஆறுதல்

நான் சிறுமையும், எளிமையுமானவன். கர்த்தரோ என் மேல் நினைவாய் இருக்கிறார் (சங்40:17). நான் தென்காசி அருகே, வல்லம் என்ற கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன். பள்ளி, கல்லூரி படிப்பை வல்லம், இலஞ்சி, செங்கோட்டை, தூத்துக்குடியில் முடித்து, 1984ஆம் ஆண்டு மே 5 தேதி நான் கோவை வந்தேன். அப்பொழுது என் வயது 20. என் 24வது வயதில் (1987) நான் ஈரோடு ஆப்பக்கூடல் எஸ்.ஐ.டி. பாலிடெக்னிக் கல்லூரியில் ஆடிட் செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது என் தந்தையின் திடீர் மரண செய்தி என்னை நிலைகுலையச் செய்தது. மிகவும் துயரமடைந்தேன். ஆனால் என்னோடு இருந்து, பரம தகப்பனான இயேசு என்னை ஆறுதல்படுத்தினார். தேற்றினார். படிப்படியாக அவருடைய கிருபையினால் என்னை உயர்த்தி, இன்று லட்சக்கணக்கான மக்களுக்கு என்னை ஆசீர்வாதமாக வைத்திருக்கிறார்.

இதை நான் நினைத்துப் பார்த்ததே இல்லை. இந்த தேவன் இயேசு ஆறுதலற்ற உங்களைத் தேற்றி, பாக்கியவானாக, பாக்கியவதியாக மாற்றி, உங்கள் மூலம் பல லட்சக்கணக்கான மக்களை ஆசீர்வதிக்க விரும்புகிறார். பிறருக்காக இயேசுவின் சமூகத்தில் கண்ணீரோடு ஜெபியுங்கள். தேவன் இயேசு உங்களை 1000 மடங்கு உயர்த்தி ஆசீர்வதிப்பார்.

இயேசுவின் சமாதானம்
பரவச நேரம்
தமிழன் டி.வி.யில்
காலை 7.15

ஜூலை
14 28
திங்கள்
ஒவ்வொரு 2வது, 4வது
திங்கட்கிழமை


## கற்றுக்கொள்வோம்

உண்மை சம்பவம்

# விடாமுயற்சி தரும் வெற்றி

- ராஜ்லின்ட் ராபின்



எனக்கன்பானவர்களே... நான் ஜுன் 17ஆம் தேதி தற்செயலாய் பார்த்து, வீடியோ எடுத்த உண்மை சம்பவம் இது. நம் விடாமுயற்சிக்கு தேவன் இயேசு வெற்றி தருவார் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

**குறிக்கோள்:** பல்லி ஒன்று சிறு வண்ணத்துப்பூச்சி ஒன்றை வெகு நேரம் பார்த்துக் கொண்டிருந்தது. தன்னுடைய இரைக்காக எப்படியாவது அதைப் பிடித்துவிட வேண்டும் என்ற குறிக்கோள் அந்த பல்லிக்கு.

**ஞானம் :** ஆகவே,அதைக் குறிவைத்து, மெதுவாக ஞானமாக நடந்தது. தான் அதை நெருங்குவது அதற்கு தெரியக்கூடாது என்று மிகவும் கவனமாக அடி எடுத்து வைத்தது.

**பொறுமை :** கொஞ்சம் கொஞ்சமாக அருகே நெருங்கும் போது, நீடிய பொறுமையை கடைபிடித்தது.

**தடை:** அப்போது எதிர்பாராத விதமாக பல்லிக்கு வலதுபுறம் ஒரு எறும்பு, பல்லியை நோக்கி வந்தது. அது பல்லியின் காலை கடித்தது.

**யுத்தம்:** எறும்பு, பல்லியின் காலை கடித்தவுடன் தன் தலையை திருப்பாமல் தன் காலால் அதை எட்டி உதைத்தது. எறும்பு வலதுபுறம் தூக்கி வீசப்பட்டது.

**தோல்வி :** இதை தாண்டி, பல்லி குறிவைத்து சிறு வண்ணத்துப்பூச்சியை, கவ்வி பிடிக்கச் சென்றது. ஆனால், அந்த பூச்சி தப்பிவிட்டது. பல்லிக்குத்தோல்வி.

**விடா முயற்சி:** ஆனால், பல்லி சோர்ந்து போகாமல் தன் குறிக்கோளை நிறைவேற்ற, மீண்டும் அந்த சிறுபூச்சியை பிடிக்க முயற்சி செய்தது.

**வெற்றி:** பல்லியின் விடாமுயற்சியினால் இரண்டாவது முறை, அந்த பூச்சியை அது கவ்விப்பிடித்தது.

## இறுதி வெற்றி தரும் இயேசு

இது சாதாரண பல்லிக்கு கிடைத்த வெற்றி. இயேசு நமக்கு தம்முடைய பரிசுத்தாவியின் அபிஷேகத்தை கொடுத்திருக்கிறார். ஆகவே, நம் வாழ்வில் இறுதி வெற்றி பெற கர்த்தர் இயேசுவிடம் ஞானம், பொறுமையை கேட்டு பெற்றுக்கொள்வோம். இடையில் எறும்பைப் போல சாத்தான் தடையை கொண்டு வருவான். இயேசுவின் பெயரால் சாத்தானை காலால் உதைப்போம். தோல்வி வருவது போல தெரியும், மீண்டும் சோர்ந்து போகாமல் முன்னேறி செல்வோம். நம் விடாமுயற்சியை பார்க்கும் இயேசு நமக்கு வெற்றி தருவது அதிக நிச்சயம். குதிரை யுத்த நாளுக்கு ஆயத்தமாக்கப்படும். ஜெயமோ, கர்த்தரால் வரும். (நீதி :21:31)




இந்த உண்மை சம்பவத்தை, நீங்கள் வீடியோவில் பார்க்க You Tube - ல் **Rajlynt Robin** ன் சேனலில் பார்க்கவும்.

*This Video may change your life*



பெண்கள் பகுதி

# கனி மரம்

- பொற்செல்வி ராபின்

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவருக்கே மகிமை!

என் பாசத்திற்குரிய சகோதரியே!
பரிசுத்த தேவன் இயேசுவின் இனிய பெயரால் உன்னை அன்புடன் வாழ்த்துகிறேன். தேவாதி தேவனுக்கே மகிமை!

## கனி தரும் மரம்

கனி கொடுக்கும் மரங்கள் இரண்டு வகையாய் உள்ளன. ஒன்று நல்ல கனி கொடுக்கும் மரம். இன்னொரு வகை கெட்ட கனி கொடுக்கும் மரம். மனிதர்களாகிய நாம் நல்ல கனியை மட்டுமே விரும்புகிறோம். கெட்ட கனியை யாரும் புசிப்பது இல்லை. நம்மை உருவாக்கிய தேவன் இயேசுவும் நம்மை நல்ல கனி கொடுப்பதற்காகவே உருவாக்கியிருக்கிறார். (யோவான் 15:16). இதை நாம் விளங்கிக் கொண்டு வாழ்ந்தால் மட்டுமே நல்ல கனி தர முடியும். மட்டுமல்ல முடிவில் பரலோகம் போக முடியும். நல்ல கனி கொடாத மரம் வெட்டுண்டு



அக்கினியில் (நரகத் தீயில்) போடப்படும். (மத்தேயு 3:10).

## ஆவியின் கனி

கலாத்தியர் 5:22,23ம் வசனங்கள் ஆவியின் கனியைப் பற்றி தெளிவாய் கூறுகின்றன. ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம். ஆரஞ்சு பழத்தில் உள்ள சுளைகளைப் போல ஆவியின் கனியில் இந்த 9 குணங்கள் இருக்கின்றன. இந்த குணங்கள் நம்மிடம் காணப்படுகிறதா என்று நம்மை உருவாக்கிய தேவாதி தேவன் இயேசு நம்மை உற்று கவனிக்கிறார். இந்த குணங்களைப் பார்த்து நம்மை தேவன் இயேசு நேசிப்பார். நாமும் நம் ஜெபம் மூலம் தேவன் இயேசுவோடு நெருங்கி உறவாட முடியும்.

## மாம்சத்தின் கிரியை

சிந்தனையால், உடல் ரீதியாய், மனிதர்கள் செய்யும் பாவங்களையும், அக்கிரமங்களையும், மாம்சத்தின் கிரியைகள் என்று பைபிள் கூறுகிறது. இவை விபச்சாரம், வேசித்தனம், பில்லி சூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள்,

## அன்பே பெரியது

கோபங்கள், சண்டைகள், பிரிவினை, மார்க்க பேதங்கள் பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் என்று கலாத்தியர் 5:19, 20,21 ம் வசனங்கள் கூறுகின்றன. இவை தேவன் அருவருக்கும் பாவங்கள். இவைகளை செய்பவர்கள் பரலோகம் (மரண நேரத்தில் பரலோகத்திற்குள்) செல்ல முடியாது என்று கலாத்தியர் 5:21ம் வசனம் நம்மை எச்சரிக்கிறது.

அன்பே பெரியது என்று 1 கொரிந்தியர் 13:13ம் வசனம் கூறுகிறது. இவ்வுலகில் அன்புதான் பெரியது. மற்ற எல்லாம் சிறியது தான், தேவனுடைய பார்வையில் அன்பு இல்லாமல் ஒரு மனிதனும் பரலோகம் செல்ல முடியாது. நம் உள்ளத்தில் அன்பு இருந்தால் மட்டுமே பிறருக்கு உதவி செய்வோம். அன்பு இல்லாதவர் நீதிமானாய் வாழ முடியாது. நீதியின் பாதையில் நடக்க முடியாது. நீதிமான் பனையைப் போல செழித்து வளருவான் என்று சங்கீதம் 92:12ம் வசனம் கூறுகிறது. பரிசுத்தமாய் வாழ்ந்து சகோதர அன்பை வெளிப்படுத்தினால் போதும். கணவனை தவிர மற்ற ஆண்களிடம் பழகும் போது தெளிந்த புத்தியோடு அதிகமான இடைவெளி வைத்து பழகுவது நல்லது. இல்லாவிட்டால் வேதனையும், கண்ணீரும் உண்டாகும். கணவர், பிள்ளைகளை விட்டுவிட்டு பிற ஆணோடு ஓடிப்போகும் பெண்களை குறித்து அதிகமாய் நாம் கேள்விப்படுகிறோம். இப்படிப்பட்ட சகோதரிகள் மனந்திரும்பி வந்து கணவரோடும், பிள்ளைகளோடும் சேர்ந்து வாழ நாம் கண்ணீரோடு ஜெபிப்போம். நாம் ருசித்து பார்த்த இயேசுவின் அன்பைப் அநேகருக்கு நாம் சொல்வோம். இப்படியெல்லாம் நல்லவராய் வாழ்ந்து நாம் நல்ல கனி தரும் மரங்களாக வாழ்வோம்.

## இந்த ஊழிய தேவைக்கான உங்கள் ஜெபம்

இயேசுவின் சமாதானம் ஊழியத்தின் எல்லை ஒவ்வொரு மாதமும் விரிவாகிவருவதால், பணத் தேவை ஒவ்வொரு மாதமும் அதிகமாகிறது. ஒரு மாதத்திற்கு பல லட்ச ரூபாய் தேவைப்படுகிறது. இத்தேவைகள் சந்திக்கப்பட மறக்காமல் நீங்கள் உங்கள் ஜெபத்தில் தாங்கும் படி அன்போடு கேட்டுக் கொள்கிறோம். தேவன் இயேசு உங்களை ஆசீர்வதிப்பாராக.

**உங்கள் நன்கொடை**

நீங்கள் இவ்வூழியத்திற்கு நன்கொடை அனுப்ப விரும்பினால் இந்தியாவில் நீங்கள் எங்கு வசித்தாலும் கீழ்கண்ட வங்கிக் கிளைகளில் நேரடியாக பணத்தைச் செலுத்தலாம் அல்லது மணியார்டர், டி.டி. மூலமாக நன்கொடை அனுப்பலாம். வெளிநாட்டில் வசிப்பவர்களும் நன்கொடை அனுப்ப வசதியாக FCRA சான்றிதழ் இந்த ஊழியத்திற்கு இந்திய அரசால் அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. விவரம் www.peaceofjesus.org

| | | |
|---|---|---|
| ICICI Bank | PEACE OF JESUS MINISTRY & TRUST<br>A.S.V. ROBIN | A/c No. 615201134411<br>A/c. No. 615201500867 |
| IDBI BANK | PEACE OF JESUS MINISTRY | A/c No. 006102000034441 |
| State Bank of India | A.S.V. ROBIN | A/c. No. 31682257041 |
| TMB Tamilnad Mercantile Bank Ltd | A.SOLOMON VICTOR ROBIN | A/c. No. 058100050303244 |
| Indian Overseas Bank | A.S.V. ROBIN | A/c. No. 010601000025999 |
| इंडियन बैंक Indian Bank | YESUVIN SAMADHANAM<br>A.S.V. ROBIN | A/c No. 725420502<br>A/c. No. 434465781 |

# கேள்வி பதில்

ஏ.எஸ்.வி. ராபின்



நான் பைபிள் வாசித்து, ஜெபித்து, கர்த்தரை நேசித்து வாழ்ந்து வருகிறேன். சில வேளைகளில் என் சிந்தனையில் வேண்டாத பாவ உணர்வு வருகிறது. பாவம் செய்துவிடுகிறேன். இதை தகாத காரியம் எனறு உணர்ந்து ஆண்டவர் இயேசுவிடம் பாவத்தை அறிக்கை செய்து மன்னிப்பு கேட்கிறேன். என் உள்ளத்தில் நான் பரலோகம் போகும் பாக்கியத்தை இழந்து விடுவேனோ என்று பயப்படுகிறேன். நான் நரகம் போகக் கூடாது. பரலோக வாழ்வை இயேசுவிடமிருந்து பெற்றுக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?

எஸ்.கே. ஆண்டர்ச்ன், கனடா.

நீங்கள் எழுதியிருக்கும் காரியத்தை வாசித்து பார்க்கும்போது, நீங்கள் பயப்படுவது சரிதான். பைபிளில் முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான் (மத்தேயு 24:13) என்று தேவாதி தேவன் இயேசு சொல்லியிருக்கிறார். மத்தேயு 5:28ல் ஒரு பெண்ணை இச்சையோடு பார்த்தாலே, அது விபச்சாரம் செய்ததற்கு சமம் என்று இயேசு கூறியிருக்கிறார். முடிவு பரியந்தம் என்றால் நம்முடைய மரணம் அல்லது இயேசுவின் ரகசிய வருகை. இதில் எது முந்துகிறதோ யாருக்குமே தெரியாது. சிந்தையில் பாவத்தை கொண்டு வருபவன் சாத்தான். இந்த சாத்தானை நீங்கள் ஜெயிப்பதற்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் தேவை. கர்த்தரே ஆவியானவர். கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையும் உண்டு (2 கொரி 3:17).

நீங்கள் தனிமையில் உபவாசித்து, கண்ணீரோடு தேவ சமூகத்தில் காத்திருந்து இயேசுவே, எனக்குள் வாரும் என்று ஜெபியுங்கள். அப்பொழுது அவர் உங்களை தம்முடைய பரிசுத்த ஆவியால் நிரப்பி, இயேசு உங்களுக்குள் வந்து தங்குவார். நீங்கள் தேவன் தங்கும் ஆலயமாய் மாறுவீர்கள். (1கொரி 3:16). அப்பொழுது நீங்கள் பாவத்தை மேற்கொள்ள முடியும். உங்கள் சிந்தனையில் பாவ உணர்வை பிசாசு கொடுக்க முயற்சிக்கும் போதே நீங்கள் விழிப்படைந்து, இயேசுவே என்னை பரிசுத்தமாய் காத்துக் கொள்ளுங்கள் என்று கூறுங்கள். அப்பொழுது பாவம் செய்ய தூண்டும் இச்சை, உங்களை தாக்காதபடி நீங்கள் தப்பலாம். முடிவில் பரலோகம் செல்லலாம். பாவம் செய்து கொண்டிருக்கும் போது ஒரு மனிதனின் மரணம் நிகழ்ந்தால் அவனுடைய ஆத்துமா உடனேயே நரகத்தில் விழுந்து நிரந்தரமாய் கதறி துடிக்கும். ஆகவே உங்கள் ஆத்துமாவை ஒவ்வொரு நொடிப் பொழுதும் ஜாக்கிரதையாய் காத்துக்கொள்ளுங்கள் (உபாகமம் 4:10).




ஏ.எஸ்.வி. ராபின் – பொற்செல்வி ராபின் கொடுத்த தேவ செய்திகளைக் கண்டு தேவன் இயேசு தரும் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள்

keyword : ASV Robin, Rajlynt Robin, Porchelvi Robin



வாலிபர் பகுதி

# அற்புதங்களின் தேவன்



- பொற்செல்வி ராபின்

அன்பு தம்பி, தங்கையே,
பரிசுத்த தேவன் இயேசுவின் பெயரால் உன்னை அன்புடன் வாழ்த்துகிறேன். தேவாதி தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

## கானா ஊர் அற்புதம்

கர்த்தர் இயேசு, ஊழியத்தை ஆரம்பித்தபோது, அவர் முதன் முதலில் அற்புதம் செய்தது கானா ஊர் திருமண வீட்டில் (யோவான் 2:1-11).திருமண வீட்டில் தண்ணீரை, சுவை மிகுந்த இனிமையான திராட்சை ரசமாக இயேசு மாற்றினார். அங்கு பந்தியில் அமர்ந்து அதை பருகியவர்கள் அதன் சுவையை புகழ்ந்தார்கள். உன் வாழ்வையும், இது போலவே சுவை மிகுந்ததாய், இனிமை நிறைந்ததாய், தேவன் இயேசு மாற்ற அதிகாரமுடையவர் என்று நம்பு அப்படியே நடக்கும். அவரை தாகத்தோடு தேடு.

## அப்பங்கள், மீன்கள்

இஸ்ரேல் நாட்டில் உள்ள கலிலேயா கடலின் அக்கரையில் இருந்த மலையின் மேல் கர்த்தர் இயேசு ஏறி,மக்களுக்கு பிரசங்கம் செய்தார். பசியோடு அமர்ந்து அவருடைய பிரசங்கத்தை கேட்ட மக்களுக்கு அங்கிருந்த சிறுவனிடமிருந்து, ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் வாங்கி அவைகளை ஆசீர்வதித்தார். இந்த உணவு பெருகியது. இதை சீஷர்கள் பரிமாறியபோது, ஐயாயிரம் பேர் திருப்தியாக சாப்பிட்டார்கள். மட்டுமல்ல உணவு 12 கூடைகள் நிறைய மீதியாயிருந்தது. எவ்வளவு பெரிய ஆச்சரியம்! யோவான் 6:9-13 வசனங்களில் இந்த அற்புதத்தை வாசிக்கிறோம். தம் பிள்ளைகளை போஷிக்கும் இயேசு, தேவாதி தேவன் அல்லவா? அவர் உனக்கு தாயும், தகப்பனாகவும் இருக்கிறார் அல்லவா?

## இயேசுவின் வல்லமை

யோவான் 9:1-8ல் பிறவியிலேயே பார்வை இல்லாத ஒருவருக்கு இயேசு கண்களில் பார்வை கொடுத்ததை வாசிக்கிறோம். இயேசு எவ்வளவு ஆச்சரியமான தேவன்! இன்றும் மருத்துவத்துறையே அதிசயிக்கும் மகத்தான அற்புதம் இது அல்லவா? மாற்கு 4:37-41 வசனங்களில் காற்றையும், கடலையும் கொந்தளிக்க விடாதபடி, இரையாதே, அமைதலாயிரு என்று இயேசு அதட்டி அமைதிப்படுத்தினார் என்று வாசிக்கிறோம். இப்படி இயற்கை இயேசுவுக்கு கீழ்ப்படிந்து கட்டுப்பட்டது. அவருடைய வார்த்தைகள் அவ்வளவு வல்லமை நிறைந்ததாய் இருந்தன. தொழு நோயாளியையும் இயேசு தொட்டு சுகமாக்கினார் (லூக்கா 5:13,14).

## கடல்மேல் நடந்தார்



அவர் (இயேசு) கடலின் மேல் நடக்கிறதை அவருடைய சீஷர்கள் கண்டு கலக்கம் அடைந்தார்கள் என்று மாற்கு 6:49ம் வசனத்தில் காண்கிறோம். மனிதர்கள் கடல்மேல் நடக்க முடியாது. மூழ்கி விடுவார்கள். இயேசு உலகத்தையும், அண்ட சராசரங்களையும், கடலையும் உருவாக்கிய தேவனாய் இருந்ததால் அவரால் கடல் மேல் நடக்க முடிந்தது.

இறந்து விட்ட 12 வயது சிறுமியை இயேசு, பிள்ளையே எழுந்திரு என்று கூறி உயிரோடு எழுப்பினார் (லூக்கா 8:49,55). இப்படி உயிரோடு எழுப்பின சர்வ வல்லமையுள்ள தேவன் தான் இயேசு. இயேசுவை நம்பி அவரையே நீ சார்ந்து வாழ்ந்தால், நீ எல்லா வித நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். இயேசு அற்புதங்களின் தேவன். உன் வாழ்விலும் அவர் அற்புதங்கள் செய்வார்.





## வேத வினாப் போட்டி

**(அனைவரும் கலந்து கொள்ளலாம்) பிலிப்பியர் 1:4**

**வசனம் குறிப்பிடுக**

**என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலன் உண்டு. - சொன்னவர் யார்?**

**சென்ற மாத சரியான விடை.**

**யோவான் 17:20.**

போர்ச்சேவகர் கூட்டம், பிரதான ஆசாரியர், பரிசேயரின் ஊழியர்கள்.



ஆக்னஸ் லாரன்ஸ்

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 20.07.2014**

## உங்கள் ஜெப விண்ணப்பம்

உலகில் எங்கு வசித்தாலும், உங்கள் ஜெபக்குறிப்புகளை எங்களுக்கு இமெயில் (Email) மூலம் அனுப்பி வையுங்கள். ஜெபித்து, கர்த்தர் இயேசு தரும் பதிலை நாங்கள் உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம். நாங்களும், இயேசுவின் சமாதானம் ஜெபக்குழுவினரும், ஜெப வீரர்களும் உங்களுக்காக தொடர்ந்து ஜெபிப்போம். ஆனால், உங்கள் தனிப்பட்ட வாழ்வில் நீங்கள் இயேசுவோடு நெருங்கி அவருக்கு பிரியமாய் வாழுங்கள் அப்பொழுது நம் ஜெபத்தை கேட்டு, தேவன் இயேசு உங்களை ஆசீர்வதிப்பார். (தானியேல் 9:23 ன் படி)

asvrobin@peaceofjesus.org pochelvirobin@peaceofjesus.org
rajlyntrobin@peaceofjesus.org prayers@peaceofjesus.org

**www.peaceofjesus.org**

Phone : +91 9994510610 (Jayaraj)

எங்கள் முகவரி
**இயேசுவின் சமாதானம்**
393, பேஸ் 2,
ஹவுசிங் யூனிட், சிட்கோ,
கோயம்புத்தூர் – 641 021,
தென் இந்தியா



Our Address
**PEACE OF JESUS**
393. Phase 2,
Housing Unit, SIDCO,
Coimbatore - 641 021.
S.India



தொடர் - 105

# இயேசுவின் ரகசிய வருகை

- பொற்செல்வி ராபின்

## ஆயத்தப்படுங்கள், ஆயுத்தப்படுத்துங்கள்

உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் (உடல்) முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாய் இருக்கும்படி காக்கப்படுவதாக. (1தெச 5:23).

### இயேசு திருச்சபை ஊழியர்களுக்கு கூறுவது

ஆண்டவர் இயேசு திருச்சபைகளைக் குறித்து அதிகமான எதிர்பார்ப்போடு இருக்கிறார். இறைவன் இயேசு இவ்வாறு கூறுகிறார் என்னால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள் உலகமெங்கும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவையாவும் என்னுடைய இரண்டாம் வருகைக்கு மக்களை ஆயத்தப்படுத்த வேண்டும். உலகத்தை படைத்தவராகிய என்னை என் மக்கள் தாகத்தோடு தேட வேண்டும்.

### வசனம் சுத்தமாக்கும்

திருச்சபை மக்கள் என் வசனங்களின்படி வாழ வேண்டும். சத்திய வசனங்களால் இவர்களை சுத்தமாக்குவேன். ஏனென்றால், நான் பரிசுத்த தேவன் ஒவ்வொருவரும் என்னை நேசிக்கும் அன்பினால் அனல் பற்றி எரிய வேண்டும். மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் (யோவான் 2:28) என்று என்னுடைய தீர்க்கதரிசி யோவேல் மூலம் நான் சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறும் கடைசி காலம் இது. இந்நாட்களில் என் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை திருச்சபை மக்கள் மேலும் மழை போல பொழிவேன். நான் தெரிந்து கொண்ட மக்கள் மேல் வல்லமை வரங்களை பொழிந்து அவர்களை, என் ஊழியத்தை செய்ய வைப்பேன் என்றும் தேவாதி தேவன் இயேசு கூறுகிறார். கர்த்தரே ஆவியானவர். கர்த்தருடைய ஆவி எங்கேயே அங்கே விடுதலையும் உண்டு. ( 2கொரி 3:17). என்பதை மக்கள் அறியவேண்டும்.

### தெளிவான சத்தியம்

திருச்சபை போதகர்கள் பைபிளில் நான் கொடுத்த சத்திய வசனங்களை தெளிவாய், கூட்டாமல் குறைக்காமல் சபை மக்களுக்கு அப்படியே அறிவிக்க வேண்டும். பாவத்தை பாவம் என்றும், அக்கிரமச் செயலை அக்கிரமம் என்றும் வசனங்களை ஆதாரமாக வைத்து, சபை மக்களை கண்டித்து உணர்த்த வேண்டும். திருச்சபையின் குடும்பங்கள் உடையாமல் தடுக்க உபவாசித்து, போராடி ஜெபிக்க வேண்டும். திருச்சபை போதகர்கள், சபை மூப்பர்கள் ஒற்றுமையாய் இணைந்து செயல்பட வேண்டும் என்று தேவாதி தேவன் இயேசு சொல்கிறார்.




- தொடரும்.







மகப்பேறு மருத்துவம்

எலும்பு முறிவு சிகிச்சை

நுண்துளை அறுவை சிகிச்சை

**(Laparoscopy, Arthoscopy, Key Hole Surgery)**

மூட்டு மாற்று அறுவை சிகிச்சை

தண்டுவட அறுவை சிகிச்சை,

பொது அறுவை சிகிச்சை,

செவிலியர் பயிற்சி படிப்பு



# பெத்தேல் மருத்துவமனை

223, டாக்டர் ராஜேந்திர பிரசாத் சாலை, கோயமுத்தூர் – 641 012.

தொலைபேசி : +91 422 2498884. 3245300 Fax : +914222496147

Email : bethelhospital2006@yahoo.co.in



Dr. S. ராஜபாண்டியன் MS (Ortho) D. Ortho.,

Dr. ஷீலா ராஜபாண்டியன் MD, DGO.,



# நாம் கண்ணீரோடு ஜெபிப்போமா?

## Prayer Request

*for the world*

ஏ.எஸ்.வி. ராபின்,பொற்செல்வி ராபின், ராஜ்லின்ட் ராபின்

✶ உலகமுழுவதிலும், மக்களிடம் காணப்படுகிற மூட நம்பிக்கைகள் ஒழிய. நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் தரும் இயேசுவையே மக்கள் நோக்கிப் பார்க்க. மக்கள் உள்ளங்களில் தெய்வ பயம் உண்டாக. ✶ கடன் தொல்லையில் சிக்கி தவிக்கும் மக்கள் அதிலிருந்து மீண்டு வெளியே வர. ஆடம்பரமாய் வாழும் மக்கள் எளிமையான வாழ்வு வாழ. ✶ பாவம், அக்கிரமம் செய்து சிறையில் வாழும் மக்கள் பாவமன்னிப்பு தரும் தேவாதி தேவன் இயேசுவை ஏற்றுக்கொண்டு பரலோக ஜீவ புஸ்தகத்தில் பெயர் எழுதப்பட. இவர்கள் மனந்திரும்பி, புதுவாழ்வு வாழ, சிறைச்சாலை ஊழியங்கள் பெருக. ✶ தீவிரவாதம் ஒழிய, தீவிரவாதிகள் மனந்திரும்பி இறைவன் இயேசுவை பற்றிக் கொள்ள. ✶ தற்கொலைகள் தடுக்கப்பட, இயேசு கைவிடமாட்டார், அவர் நம்மை வாழ வைப்பார் என்ற நம்பிக்கை உலகமெங்கும் உள்ள மக்கள் உள்ளங்களில் உருவாக. ✶ கொலை, கொள்ளை, திருட்டு, வழிப்பறி செய்வோர் மனந்திரும்பி தேவ கோபத்திற்கு தப்ப. ✶ நரபலிகள் கொடுக்கப்படுவது தடுக்கப்பட. தேவனுக்கு பயப்படும் பயம், இப்படிப்பட்டவர்கள் இதயங்களில் உண்டாகி இவர்கள் மனந்திரும்ப. ✶ சிறுமிகளுக்கு, வாலிப பெண்களுக்கு செய்யப்படும் பாலியல் கொடுமைகள் நிறுத்தப்பட. இந்த செயலை செய்வோர் மனந்திரும்ப. ✶ விவசாயம் செழிக்கும்படி தேவன் இயேசு மழையை கட்டளையிட. ✶ மதுபானத்திற்கும், போதை பொருட்களுக்கும், புகைபிடிக்கும் பழக்கத்திற்கும் அடிமைப்பட்டு கிடக்கும் வாலிபர்கள், கன்னியர், பெரியோர், இயேசுவிடம் வந்து விடுதலை பெற. ✶ விபச்சார தொழிலில் சிறுமியர், பேதைப் பெண்கள் கடத்தப்பட்டு, ஈடுபடுத்தப்படுகிற அவல நிலை மாற . ✶ கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களின் பாதுகாப்புக்காக. ✶ சினிமா, அரசியல், காவல்துறையினர், விளையாட்டுத் துறையினர், வாகனம் ஓட்டுவோர், தொழில், வியாபாரம் செய்வோர், விவசாயிகள், கட்டிடத் தொழிலாளிகள், ஏழைகள், ஊனமுற்றோர், தர்மம் எடுத்து வாழ்வோர் இயேசுவே மெய்யான தேவன் என்று அவரை ஏற்றுக் கொள்ள. ✶ பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியரின் பரிசுத்த வாழ்வுக்காக. இவர்கள் தேவன் வெறுக்கும் பாவங்களை விட்டு வெளியே வர. இயேசுவிடம் வந்து விடுதலையான வாழ்வு வாழ. ✶ இயேசு ஒருவரே பாவத்திற்கு பரிகாரம் தருபவர் என்று உலக மக்கள் அனைவரும் உணர்ந்து அவரை ஏற்றுக் கொள்ள.


YouTube

ராஜ்லின்ட் ராபின்
பாடிய பாடல்கள்

என் இயேசு

**இயேசுவின் சமாதானம் பரவசப் பெருவிழா**

ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின் கொடுத்த தேவ செய்திகள், ராமராஜன், கொடுத்த சாட்சியைப் பார்த்து, தேவன் இயேசு தரும் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள்

keyword : **Rajlynt Robin**




Registered with Registrar of News Paper for India
RNI / TNTAM / 14783 / 2002

Postal Regsitration No. CB / 001 / 2012 - 2014
தனிப்பிரதி ரூ. 4/- ஆண்டு சந்தா - ரூ. 40/-

## உலக மக்களின் நல்வாழ்வை விரும்பும்

# இயேசுவின் சமாதானம் ஊழியங்கள்

## ஜெபித்துக்கொள்ளுங்கள்

– ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின், ராஜ்லின்ட் ராபின்

- ✦ திக்கற்றோர், ஊனமுற்றோர், முதியோர் மத்தியில் ஊழியம்
- ✦ உள்தேச, வெளிதேச பிரசங்க ஊழியம்
- ✦ ஏழைகள் மத்தியில் சுவிசேஷம் மற்றும் உதவி
- ✦ ஆதிவாசிகள் மத்தியில் ஊழியம்
- ✦ மருத்துவமனை ஊழியம்
- ✦ தொலைக்காட்சி ஊழியம்
- ✦ உபவாச ஜெப ஊழியம்
- ✦ தொலைபேசி ஊழியம்
- ✦ மலைப்பகுதி ஊழியம்
- ✦ பத்திரிக்கை ஊழியம்
- ✦ கைப்பிரதி ஊழியம்
- ✦ புத்தக ஊழியம்
- ✦ கடித ஊழியம்
- ✦ பாடல் ஊழியம்
- ✦ மனநல காப்பக ஊழியம்
- ✦ மிஷனெரி ஊழியம்
- ✦ இலங்கை அகதிகள் மத்தியில் ஊழியம்
- ✦ விளம்பரம் மூலம் சுவிசேஷ ஊழியம்










## ஏழைகளின் நலனில்

## உடைந்த உள்ளங்களுக்கு இயேசுவின் சமாதானம்







இயேசுவின் கிருபையினால்
கடந்த மாதங்களில்
இயேசுவின் சமாதானம்
மூலம், பணம், பொருள்,
ஜெப உதவி
பெற்றவர்களில் சிலர்

(இடம் : அரசு மருத்துவமனை,
கோவை, கூலி வேலை
செய்பவர்களின் கூடாரம், நீலம்பூர்)

Owned & Published By A.S. ROBIN Managing Trustee on behalf of Peace of Jesus Ministry & Trust 393, Phase - 2, Housing Unit, Sidco, Coimbatore - 641 021. and Printed at Vimal Offset Printing, Coimbatore - 641 012. India Editor : A.S.V. ROBIN